**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**வேளாண் வானிலை ஆலோசனை மையம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்**
**மற்றும்**
**மண்டல வானிலை மையம், இந்திய வானிலைத் துறை, சென்னை.**

**எண். 33/2024** **நாள் 23.04.2024**

---

**வானிலை ஆலோசனை அறிக்கை – கிருஷ்ணகிரி மாவட்டம்**

**மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

பகல் மற்றும் இரவு நேர வெப்ப அளவுகள் முறையே 41.0° செ. (105.8° பா) மற்றும் 25.0° செ.(77.0° பா) – யாக நிலவியது. கடந்த ஐந்து நாட்களில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை பதிவாகவில்லை.

**கிருஷ்ணகிரி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (18.04.2024 – 22.04.2024) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (24.04.2024 – 28.04.2024) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள் –1 18/04 | நாள் –2 19/04 | நாள் – 3 20/04 | நாள் – 4 21/04 | நாள் – 4 22/04 | தேதி | நாள் –1 24/04 | நாள் – 2 25/04 | நாள் – 3 26/04 | நாள் – 4 27/04 | நாள் – 5 28/04 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 40.0 | 41.0 | 41.0 | 39.0 | 40.0 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 41.0 | 41.0 | 42.0 | 41.0 | 41.0 |
| 26.0 | 27.0 | 27.0 | 26.0 | 25.0 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25.0 | 25.0 | 25.0 | 26.0 | 26.0 |
| லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | மேகமூட்டம் (ஆக்டா) | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் | லேசான மேகமூட்டம் |
| 33 – 72 | 21 – 64 | 37 –66 | 33 – 74 | 21 – 60 | காற்றின் அதிக மற்றும் குறைந்தபட்ச ஈரப்பதம் (%) | 20 – 70 | 20 – 60 | 20 – 70 | 20 – 70 | 20 – 70 |
| 2 | 4 | 2 | 2 | 0 | காற்றின் வேகம் (கி.மீ / மணி) | 12 | 12 | 12 | 10 | 10 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | 0 | காற்றின் திசை | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (24.04.2024 முதல் 28.04.2024 வரை)**

அடுத்த ஐந்து நாட்களுக்கான கிருஷ்ணகிரி மாவட்ட வானிலையில், வானம் லேசான மேகமூட்டத்துடனும் மழையற்றும் காணப்படும். பகல் வெப்பம் 42.0° செ. (107.6° பா) – க்கு மிகாமலும், இரவு வெப்பம் 25.0° செ. (77.0° பா) யாகவும் காணப்படும். காற்றின் திசை பெரும்பாலும் தென் கிழக்கு மற்றும் கிழக்கிலிருந்தும் அதன் வேகம் மணிக்கு 10 – 12 கி. மீ என்றளவில் வீசும். காற்றின் ஈரப்பதம் 20 – 70 % மாக நிலவும்.

**கால்நடைகள், கோழிகள் மற்றும் வேளாண் வானிலை ஆலோசனை**

| கால்நடைகள் , கோழிகள் மற்றும் பயிர்கள் | நிலை | வானிலை ஆலோசனை |
|---|---|---|
| கோழிகள் | பொதுவான | கோழிப்பண்ணையாளர்கள் தொடர்ந்து கோடை கால பராமரிப்பு முறைகளை தீவிர முறையில் கடைபிடிக்க வேண்டும். குறிப்பாக தீவன (90 – 95 கிராம் / நாள் / கோழி) எடுப்பு மிகவும் குறைந்துள்ளது. அதன் காரணமாக முட்டை உற்பத்தியும், முட்டையின் எடையும் மிகவும் குறைந்துள்ளது. ஆதலால், அடுத்து வரும் நாட்களில் கோடைகாலத்திற்கான தீவன மேலாண்மையை கடைபிடிக்க வேண்டும். தீவனத்தில் அமினோ அமிலங்கள் குறிப்பாக மித்தியோனின் மற்றும் லைசின் சேர்த்தல், தாவர எண்ணெயைக் கொண்டு எரிசக்தியின் அளவை உயர்த்துதல், எலக்ட்ரோலைட்ஸ் உப்புக்கள் மற்றும் வைட்டமின் சி போன்றவற்றை கலந்து தர வேண்டும். அதிக அளவில் முட்டை ஓடு குறைபாடுகளை களைய, சோடா உப்பை டன்னிற்கு 1.5 – 2.0 கிலோ வரை சேர்த்து அளிக்க வேண்டும். அயற்சி ஏற்படாவண்ணம், தீவனத்தை காலை (5 – 10 மணி ) மற்றும் மாலை ( 5– 9 மணி) மட்டுமே தர வேண்டும். இதனால் வெப்ப அதிர்ச்சியில் இருந்து கோழிகளை காப்பாற்றலாம். காலை முதல் இரவு வரை குளிர்ந்த நீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். |
| கால்நடைகள் | பொதுவான | **<u>கோடைகாலத்தில் கால்நடைகளுக்கான தீவன மேலாண்மை</u>**<br>• பகல் வெப்பநிலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மாடு மற்றும் ஆடுகளின் பால் உற்பத்தி மற்றும் உடல் எடை குறையாமல் இருப்பதற்கு அடர்தீவனம் மற்றும் பசுந்தீவனம் போதுமான அளவு அளிக்க வேண்டும்.<br>• கலப்பு தீவனத்தை மலிவான தீவன மூலப்பொருட்களாக வாங்கி, அதன் மூலம் எளிய முறையில் தயாரிக்கலாம். பத்து கிலோ கலப்பு தீவனத்தில் 4 கிலோ தானியங்கள் (சோளம், மக்காச்சோளம், கம்பு, ராகி) மற்றும் 3 கிலோ புண்ணாக்கு வகைகள் (கடலை, சோயா), 2. 75 கிலோ அரிசித்தவிடு, 200 கிராம் தாது உப்புக்கலவை, 50 கிராம் சமையல் சோடா சேர்த்து அருகில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரத்தில் அரைத்து 3 – 4 வாரங்களுக்கு சேமித்து வைத்து கொள்ளலாம்.<br>• பசுந்தீவனம் கிடைக்காத சமயங்களில் காய்ந்த அல்லது பச்சையாக உள்ள மர இலைகளை பயன்படுத்தலாம். காய்ந்த அல்லது உலர்ந்த மர இலைகளை தீவனமாக பயன்படுத்தும் போது தாது உப்புக்கள் மற்றும் ஈஸ்ட் ஆகிய செரிமானத்திற்கு உதவிடும் உபப்பொருட்கள் கொடுக்க வேண்டும். |
| **வேளாண் அறிவியல் நிலையம்** | | |
| மரவள்ளி | வளர் பருவம் | மரவள்ளி நடவு செய்துள்ள விவசாயிகள் 3 முதல் 5 மாதங்களுக்குள் ஏக்கருக்கு யூரியா 35 கிலோ மற்றும் பொட்டாஷ் 80 கிலோ மேலுரமாக இட்டு நீர்பாய்ச்ச வேண்டும். மேலும், செடி வெளுத்து காணப்படும் சமயத்தில் லிட்டருக்கு 5 கிராம் மரவள்ளி பூஸ்டரை ஒட்டும் திரவம் கலந்து 1 மாத கால இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும். |
| வேளாண் பயிர்கள் | பொதுவான | மாவட்டத்தில் தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்து பற்றாக்குறை 50 சதவீகிதத்திற்கு மேல் உள்ளதால் அசோஸ்பைரில்லம் மற்றும் பொட்டாஷ் கரைக்கும் பாக்டீரியாக்களை ஏக்கருக்கு 1 கிலோ அனைத்து வேளாண் பயிர்களுக்கும் நடவு செய்யும் போது இட வேண்டும். |
| தோட்டக்கலை பயிர்கள் | பொதுவான | தோட்டக்கலை பயிர்களுக்கு 5 – 8 கிலோ அர்கா கூட்டுநுண்ணுயிர்கலவையை ஏக்கருக்கு 500 கிலோ மட்கிய குப்பை அல்லது செறிவூட்டப்பட்ட எருவுடன் கலந்து அடியுரமாக இட வேண்டும். |
| பயிர்கள் | பொதுவான | பாசன நீர் பற்றாக்குறையுள்ள விவசாயிகள் பாசன இடைவெளியை அதிகரித்து அதிக பரப்பளவு சாகுபடி செய்ய ஏக்கருக்கு 200 மில்லி மித்தைலோ பாக்டீரியம் கரைசல் அல்லது 0.5 % பொட்டாசியம் குளோரைடு கரைசலைக் கொண்டு 15 – 20 நாட்கள் இடைவெளியில் தெளிப்பு செய்ய வேண்டும். |
| மல்லிகை | பூக்கும் பருவம் | மல்லிகை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மண்ணின் ஈரப்பதம் மற்றும் மண்ணின் பண்புகளை மேம்படுத்தி நல்ல மகசூல் பெற பயிர்க் கழிவுகளை கொண்டு மண் மூடாக்கு அமைக்க வேண்டும். |

தொழில்நுட்ப அலுவலார்
வானிலை ஆலோசனை மையம்
கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறை
கால்நடை மருத்துவக் கல்லூ மற்றும் ஆராய்ச்சி
நிலையம் நாமக்கல்

பேராசிரியர் மற்றும் தலைவர் & ஒருங்கிணைப்பாளர்
வானிலை ஆலோசனை மையம்
கால்நடை உற்பத்தி மேலாண்மைத்துறை
கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
நாமக்கல்